செய்தி வெளியீடு எண் : 1623 நாள் : 17.09.2022

## செய்தி வெளியீடு

விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே அவர்களுக்கான சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை உடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உரு கொடுக்கும் வகையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 2022–2023–ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது–

**"விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ.2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு, துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் (Tatkal Scheme) மின் இணைப்பு பெற 90 சதவீதம் மானியம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஏற்படும் செலவு ரூ.23.37 கோடி ஆகும்."**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2022–2023–ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 900 ஆதிதிராவிடர் விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் ரூ.21,03,97,500/– (ரூபாய் இருபத்தொன்று கோடியே மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) மற்றும் 100 பழங்குடியின விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.2,33,10,000/– (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) 90 சதவீத மானியத் தொகையாக மொத்தம் ரூ.23,37,07,500/– (ரூபாய் இருபத்து மூன்று கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை(நிலை)எண்.74, ஆதி(ம)பந(சிஉதி) துறை, நாள்.29.08.2022–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in